## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.11/2022

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 12 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R.சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 12.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஆதித்தன் – DW– 1 | வயது | : | 45 /2026 |
| த/க பெயர் | : | திரு. பொன்னுசாமி | தொழில் | : | சுய தொழில் |
| முகவரி | | திருமக்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை ;–**

1) வழக்குரை, எதிர்வழக்குரை , நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் மற்றும் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் யார் யாருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்காகவும், 2ம் பிரதிவாதி வடுகநாதன், 3ம் பிரதிவாதி சுரேஷ்காகவும் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பொன்னுசாமி , ராஜகோபால் இறந்துவிட்டார்கள்.
2) தாவா சொத்து எத்தனை அயிட்டங்களுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. A அட்டவணை சொத்தில் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. A அட்டவணை சொத்தில் வாதிதான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து A அட்டவணை சொத்தில் வாதிதான் குடியிருந்து வருகிறார் என்றால் கடந்த 30 வருடங்களாக குடியிருந்து வருகிறார்.
3) வாதி வீட்டிற்கு பக்கத்தில்தான் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீடு கிழக்கு பார்த்த வாசப்படி கொண்ட வீடு என்றால் சரிதான். வாதி வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி வந்தால் பிள்ளையார் கோவில் தெருவை அடையலாம் என்றால் சரிதான். அந்த வழியில்தான் வாதி வந்து செல்கிறார் என்றால் சரியல்ல, முனுசாமி காலி மனை வழியாக வந்து செல்கிறார். முனுசாமியின் காலி மனை தாவா சொத்தின் வழிக்கு எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு பக்கம். இந்த விபரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியவில்லை.
4) வாதிக்கு வேறு பாதை இருப்பதாக எதிர்வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்த விபரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அரசு நீர் தொட்டி மோட்டார் ரூமுக்கு

வடக்கு பக்கமாக B அட்டவணை சொத்து உள்ளது என்றால் சரிதான். B அட்டவணை சொத்தின் முகப்பு பகுதியில் இரண்டு கட்டை கேட் போடும் அமைப்பில் கட்டியுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் கேட் போடும்போது 2021 இல் வாதி தடுத்ததால் இதுவரை போடவில்லை என்றால் சரிதான். இந்த பிரச்சனையின்போது தான் வாதி எங்கள் மீது புகார் கொடுத்து காவல் நிலையத்தில் விசாரித்து நீதிமன்ற உத்தரவுப்படி தீர்த்துக்கொள்ளலாம் என பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

5) நான் 20 வருடங்களாக சென்னையில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். எனது அப்பா பொன்னுசாமியை சின்னவர் என்று ஊரில் உள்ளவர்கள் அழைப்பார்கள் என்றால் சரிதான். B அட்டவணை சொத்திற்கு வடப்புறம் ஆலமரம் உள்ளது என்றால் சரியல்ல, நடுப்புறத்தில் உள்ளது. ஆலமரம் நடுப்புறத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆலமரம் 100 ஆண்டுகளுக்கு மேல் உள்ள மரம் என்றால் சரிதான். அந்த ஆலமரத்தின் அடியில் வீரனார் கோவில், முன்னடியான் சிலை உள்ளது என்றால் சரிதான். அந்த ஆலமரத்தின் அடியில் வீரனார் கோவில், முன்னடியான் சிலை உள்ள கோவில் 2021 இல் கட்டி கும்பாபிசேகம் செய்யப்பட்டது என்றால் 50 வருடமாக உள்ள கோவில் 2021 இல் பிரமாண்டமாக கட்டி கும்பாபிசேகம் செய்யப்பட்டது.

6) கோவில் கட்டுவதற்கு முன்பு ஆலமரத்திற்கு அடியில் சிலை வைத்து வழிபாடு செய்யப்பட்டது என்றால் 10x10 சதுரடி அளவில் சின்ன கட்டிடமாக கோவில் இருந்தது. நான் சொல்வதுபோல் 10x10 சதுரடி அளவில் சின்ன கட்டிடமாக கோவில் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புதியதாக கோவில் கட்டுவதற்கு ஊர் உறவினர்கள், வெளிநாட்டில் உள்ளவர்களிடமிருந்து நன்கொடை வசூலித்து கோவில் கட்டப்பட்டது என்றால் சரிதான்.

7) நீர் தொட்டிற்கு மேல்புறம் மோட்டார் ரூம் உள்ளது என்றால் இருந்தது, தற்போது கிழக்கு புறம் உள்ளது. அந்த மோட்டார் ரூமை மேல்புறத்திலிருந்து கிழக்கு புறத்திற்கு வாதிதான் மாற்றினார் என்றால் கோவில் நிர்வாகத்தில் உள்ள தொகையை கொண்டு மாற்றப்பட்டது. அந்த மோட்டார் ரூம் அரசுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த மோட்டார் ரூமை மாற்றுவதற்கு அரசுக்கு மனு கொடுத்தது யார் என்றால் கிராமம் மூலம் மனு கொடுத்து பேசினார்கள். அந்த கோவில் பொது கோவில் என்றால் சரிதான்.

8) தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அளந்து சென்றார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 இல் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள A அட்டவணை சொத்தின் வழியாக கிழக்கு பக்கம் சென்றால்

பிள்ளையார் கோவிலை அடையலாம் என்று வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியானவர் A அட்டவணை சொத்தின் வழியாக கிழக்கு பக்கம் செல்வதை தடை செய்தால் வாதியால் பிள்ளையார் கோவில் தெருவிற்கு செல்ல முடியாது என்றால் சரியல்ல, முனுசாமி இடத்தின் வழியாக செல்லலாம்.

9) முனுசாமி இடத்தின் வழியாக செல்லலாம் என சான் சொல்வதால் அந்த இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. முனுசாமி இடத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தென்புறம் பட்டா நிலரோடும், வடக்கில் எங்களது சொத்தும், கிழக்கில் சந்திரசேகரின் வீடும், மேற்கில் வாதியின் வீடும் உள்ளது. நான் சொல்வதுபோல் முனுசாமி காலி மனையில் எந்த காலத்திலும் பாதை அமைப்பு இல்லை என்றும், மேற்கண்ட விபரத்தை வழக்கிற்காக தற்போதுதான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல முனுசாமி காலி இடத்தில் பாதை அமைப்பு இருந்திருந்தால் இந்த விபரத்தை எனது எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் , நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்ய வந்தபோது Work Memo சொல்லிருப்பேன் என்றால் சரியல்ல.

10) அ அட்டவணை தாவா சொத்தில் வாதியானவர் 1970 இல் இருந்து வசித்து வருகிறார் என்றால் எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து இல்லை, கடந்த 30 வருடங்களாக வசித்து வருகிறார். சர்வே எண்.96/1 சொத்து எனக்கு சொந்தமானது என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் அந்த சொத்து எனக்கு சொந்தமானது என்றால் அனுபவத்தின் அடிப்படையில் சொந்தமான சொத்து. சர்வே எண்.96 இல் மொத்தம் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 0.40.0 ஏர்ஸ். சர்வே எண்.96/1 இல் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 0.40.0 ஏர்ஸ். சர்வே எண்.96 இல் மொத்த விஸ்தீரணம் தெரியாது. சர்வே எண் 96 இல் எந்த பகுதியில் 96/1 உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 96 எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது , அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 96/1 இல் விஸ்தீரணம் 0.40.0 ஏர்ஸ் என்பதற்கான நான்கெல்லைக்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

11) சர்வே எண் 96/1 இல் விஸ்தீரணம் 0.40.0 ஏர்ஸ் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 96/1 இல் சொத்தானது யார் யாருக்கு சொந்தமானது என்றால் ராஜகோபால், பொன்னுசாமி, கந்தசாமி, உத்திராபதி, சிதம்பர சபாபதி ஆகியோருக்கு சொந்தமானது. சர்வே எண் 96/1 சொத்தானது மேற்கண்ட நபர்களுக்கு பாகப்பிரிவினை செய்யப்பட்டதா என்றால் இல்லை. சர்வே எண் 96/1 சொத்தில் எந்த பகுதியில் கோவில் அமைந்துள்ளது என்றால் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. அந்த கோவிலின் நான்கெல்லை சர்வே எண்.96/1 என்றால் சரிதான்.

12)நீ.ம.சா.ஆ.1 இல் B அட்டவணை சொத்தில் தென்புறம் ராஜேந்திரன், சந்திரசேகரன் மனையும், அரசுக்கு சொந்தமான வாட்டர் டேங்க் அமைந்திருப்பதாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் B அட்டவணை சொத்தில் வடக்கு பக்கமாக எனக்கு சொந்தமான சொத்தில் ஆலமரம் , கோவில், முன்னடியார் சிலை உள்ளது என்றால் சரிதான். வாதியானவர் முனுசாமி காலி மனை வழியாக பிள்ளையார் கோவில் தெருவிற்கு செல்வதற்கான பாதை உள்ளது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிக்கு B அட்டவணை சொத்தின் வழியாக தான் பிள்ளையார் கோவில் தெருவிற்கு செல்லமுடியும் என்றும், அந்த வழியை தவிர்த்தால் வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல.

13)B அட்டவணை சொத்தில் முகப்பில் போடப்பட்ட இரண்டு கட்டைகள் வழியாக கேட் அமைத்துவிட்டால் வாதிக்கு பாதை வசதி இல்லை என்றால் சரியல்ல. தற்போது வாதியானவர் B அட்டவணை சொத்தின் வழியாக தான் சென்று வருகிறார் என்றால் சரிதான். அதை நான் தற்போது தடை செய்யவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்ததால் தடை செய்யவில்லை. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.20 10:07:53 +0530

District Munsif
Mannargudi.